**காரைநகர் பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 28 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 19 இல் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 27 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து காரைநகர் பிரதேசசபையின் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இவ்வாண்டுக்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 326,416 கணக்குக்குக் கொண்டு வரப்படாமையினால் வருமானம் கணக்குகளில் குறைவாகக் காணப்படுகின்றது.

#### 1.3.2 பெறவேண்டியவை

முற்பணம் ரூபா 16,765 தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை

ரூபா 587,104 பெறுமதியான சான்றுகள் இல்லாமையின் காரணமாக 04 கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைகள்

---

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக விதிகள் | |
| (i)அத்தியாயம் II விதி 05 | காசு, களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பான அலுவலரிடம் பிணைப்பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii)அத்தியாயம் III விதி 32 | சபையினால் ஆதனவரி மதிப்பீட்டு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

---

### 2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 4,865,497 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 4,913,151 ஆக இருந்ததுடன் செலவினங்களில் அதிகரிப்பு ஏற்பட்டமையில் நிதி விளைவு ரூபா 47,654 குறைவாகக் காட்டுகின்றது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 28,411,441 ஆக விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 31,584,811 ஆக விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 3,173,370 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 வருமான முகாமைத்துவம்

---

#### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

---

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015<br>-------<br>மதிப்பிடப்பட்டது | <br><br>உள்ளபடியானது | <br><br>டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| இறைகளும் வரிகளும் | 50 | 17 | - |
| குத்தகை வாடகைகள் | 278 | 649 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 227 | 219 | - |
| ஏனைய வருமானங்கள் | 19,430 | 18,541 | 7,311 |
| | **19,985** | **19,426** | **7,311** |

**2.3.2 வீதவரிகள்**

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக ஆதனவரி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதுமட்டுமன்றி சபையின் எல்லையிலுள்ள காணி கட்டடங்களுக்கு வீதவரி மதிப்பீடுகள் விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 முத்திரைக் கட்டணம்**

2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை பெறப்படவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 11,722,957 காணிப் பதிவாளர் நாயகத்திடம் இருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மை**

ரூபா 2,019,602 செலவு செய்யப்பட்டிருந்தபோதும் தலைமை அலுவலக கட்டடம் மீளாய்வாண்டுவரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

சபையின் எல்லைக்குள் திண்மக் கழிவு முகாமைத்துவம் முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 770 தொடக்கம் ரூபா 2,869,041 வரையான வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------------

உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்

------------------------------------------------------------

கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்து முகாமைத்துவம்

------------------------------------

(அ) சபையில் 05 வாகனங்கள் பயன்பாடின்றிக் காணப்படுகின்றது.

(ஆ) சபையிலுள்ள 15 வாகனங்களிற்கு உரிமை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------------

சபையில் பின்வரும் விடயங்களில் விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

(அ)வருமானசேகரிப்பு
(ஆ) வாகனப் பயன்பாடு
(இ) வரவு செலவுத்திட்டம்